பெரும் மழையினாலும் காற்றினாலும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதுபற்றிய விபரங்களை எல்லாம் இந்த மன்றத்திலே நான் எடுத்துக்கூறி, அதுசம்பந்தமாக எடுக்கப்பட்டுள்ள சில நடவடிக்கைகளையும் கூறினேன். மேலும் இதுபற்றிய முழு விபரங்களையும் அறிவதற்காக வருகிற 19-ம் தேதி காலை 10 மணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம் ஒன்றை சென்னையில் கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நானும் மற்ற அமைச்சர்களும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு, கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும், எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றிய முடிவினை ஆராயவும் இருக்கிறோம். அதனால் எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும் அவரவர்களுடைய தொகுதியில் ஏற்பட்டுள்ள சேதங்களைப்பற்றித் தகவல் சேகரித்துத் தலைமைச் செயலகத்திலுள்ள தலைமைச் செயலாளர் அவர்களுக்கோ அல்லது முதலமைச்சர் அலுவலகத்திற்கோ அனுப்பி வைக்க வேண்டுமென்று அனைவரையும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 47/72).

* மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

நகராட்சிப் பணியாளர்களின் வகைப்பாடு, பணிக்குச் சேர்த்துக் கொள்ளும் முறைகள், பணி நிபந்தனைகள், சம்பளம், படிகள், பணியாளர்களின் ஒழுக்கம், நடத்தை ஆகியவற்றை முறைப்படுத்துவது குறித்து தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள்

---

* 5—12—1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 77-ஏ, பிரிவின்கீழ் பிறப்பிக்கப்படவிருக்கும் வரைவு விதிகள் மேற்படிச் சட்டத்தின் 305-ஏ பிரிவின்கீழ் மாற்றத்துடனோ மாற்றமின்றியோ சட்ட மன்றம் ஒப்புதல் வழங்குவதற்காக இரு அவைகளின் முன்பும் இன்றைய நிலையில் வைக்கப்பட வேண்டும். இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னரே இவ்விதிகள் பிறப்பிக்கப்படலாம். இச்சட்டத்தின்கீழ் வகுக்கப்படும் ஏனைய விதிகளுக்கு இச்சட்டத்தின் 304-வது பிரிவின் கீழ் சட்டமன்றத்தின் இரு அவைகளின் பின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. அரசுப் பணியாளர் தொடர்பான விதிகள் திருத்தப்படும் போதெல்லாம், நகராட்சிப் பணியாளர் தொடர்பான விதிகளும் திருத்தப்பட வேண்டியது அவசியமாகும். எனவே, நகராட்சிப் பணியாளர் தொடர்பான விதிகள் அடிக்கடி திருத்தப்பட வேண்டியது அவசியமாகிறது. இத் திருத்தம் வாலாயமான திருத்தமாயிருப்பினும், அதற்கு 305-ஏ பிரிவில் கொடுத்துள்ள விரிவான நடைமுறையைப் பின்பற்ற வேண்டியுள்ளது. நகராட்சிப் பணியாளர்களின் நலனைக் கருதி இத் திருத்தம் கூடிய விரைவில் செய்யப்பட வேண்டியது அவசியம் எனக் கருதப்பட்டுள்ளதால், சட்டத்தின் 305-ஏ பிரிவில் கொடுத்துள்ள விரிவான நடைமுறையைக் கைவிட்டுவிட்டு 304-வது பிரிவில் கொடுத்துள்ள நடைமுறையைப் பின்பற்ற அரசு முடிவு செய்துள்ளது. மேற்கண்ட நோக்கத்திற்குச் செயல் வடிவம் கொடுக்க இச்சட்ட வரைவு விழைகிறது.

இச்சட்ட வரைவினை இம்மாமன்றம் ஏற்று நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜேம்ஸ் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

---

* 5—12—1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிவுகள் 2, 3, 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடி விற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, " தமிழ்நாடு 1972-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/72) சட்ட மாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று கோருகிறேன் "

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஆ) 1972-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மதுரை மாநக ராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/72).

* மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, " 1972-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி மதுரை மாநகராட்சி, (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 48/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் " என்று முன்மொழிகிறேன்.

1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 4/1919) 5-வது பிரிவில் விதிக்கப்பட்டுள்ளவாறு, சென்னை மாநகராட்சி மன்றத்தில் நூற்று இருபது உறுப்பினர்கள் உள்ளனர் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். மாநகரம் நூற்று இருபது டிவிஷன்களாகப் பிரிக்கப்படுவதற்கு மேற்சொன்ன சட்டத்தின் 45-வது பிரிவு வகைசெய்கிறது. சென்னை மாநகரின் நகராட்சிக் காரியங்களுக்காக மேற்சொன்ன சட்டத்தின் 6-வது பிரிவின் கீழ் வட்டம் (Circle) என்பது சென்னை மாநகரத்திலுள்ள

---

* 6—12—1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.